**M. M. ISMAIL**
GHIEF JUSTICE

High Court Buildings
Madras-600 001
15—2—1980

அன்புடையீர்,

இந்து சமய மன்றம், காஞ்சீபுரம், பள்ளிக் குழந்தைகளுக்குப் பல போட்டிகளை நடத்தி அவர்களுக்குச் சிறந்த நூல்களைப் பரிசுகளாகத் தந்து அவர்களுடைய உடலையும், உள்ளத்தையும் ஒருங்கே வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது அறிய மகிழ்ச்சியடைகிறேன். இந்த மன்றத்தின் பணி தொடர்ந்து பலருக்கும் பலனையும் பொலிவையும் அளித்துதவ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள்,

**மு. மு. இஸ்மாயில்.**

தமிழ்த்திரு.
அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்
துணைத்தலைவர், தமிழ்நாடு இந்து சமய மன்றம்,
திருச்சிராப்பள்ளி-620002.

ஜகத்குருவின் அருளாசியால் இயங்கி வரும் இந்து சமய மன்றம், உலகக் குழந்தைகள் ஆண்டையொட்டி, குழந்தைகட்குப் பல போட்டிகளை நடத்தி வந்துள்ளது. அவற்றின் சிகரமாக ஆண்டு நிறைவையொட்டி **"நவமணித்திரட்டு"** என்னும் பெயரில் குழந்தைகளுக்குரிய கவிதைகள் அடங்கிய தொகுப்பு ஒன்றை இம்மன்றத்தின் சார்பில் மாநிலச் செயலர் செஞ்சொல்மணி பு. மா. ஜய செந்தில்நாதன் அவர்களின் பெருமுயற்சியால் வெளியிட இருப்பது அறிந்து மகிழ்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

வாழ்க நம் செல்வங்கள்!

அன்பன்,

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600006.

## வாழ்த்துரை

'நவமணித் திரட்டு' நற்புகழ் திரட்டுக;

'குழந்தையின் வடிவில் தெய்வம் தோன்றும்' என்பது முன்னோர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதற்கேற்றாற்போல் தான் கள்ளங் கபடமற்ற அந்த வெள்ளை மனங்கள் - பிஞ்சு உள்ளங்கள் பேசும் கனிவுப் பேச்சும், செய்யும் செல்லக் குறும்புகளும் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும். நம் மழலைப் பருவ நிகழ்ச்சிகளையே நாம் மீண்டும் ஒரு முறை எண்ணிப்பார்க்கும் போது அப் பருவமே நிலைத்திருக்கக் கூடாதா என்று கூட ஏக்கம் உண்டாவதுண்டு. நாடாளும் நமது பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் தந்தையார் மறைந்த ஜவகர்லால் நேரு அவர்கள் குழந்தைகளிடத்தில் பேரன்பு வைத்திருந்ததும், தம் பிறந்த நாளையே 'குழந்தைகள் தினம்' எனச்சிறப்புற வைத்ததும் அனைவரும் அறிந்ததாகும்: 1979 ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாகவே அறிவிக்கப்பட்டது. நற் சமயப்பணிகளாற்றி வரும் நல்லமைப்பாம் இந்து சமய மன்றம்' குழந்தைகள் ஆண்டு நிறைவையொட்டி 'நவமணித் திரட்டு' என்னும் பெயரில் குழந்தைக் கவிதைகள் அடங்கிய தொகுப்பு மலரினை வெளியிட இருப்பது காலமெல்லாம் நிலைத்திருக்கக்கூடிய நற்பணியாகும். குழந்தையும் தெய்வமும்ஒன்றுதலால் குழந்தைகளுக்கான இந்த 'நவமணித் திரட்டு' தெய்வத்திற்கும் பொருந்தும் அருட்பாமாலை என்றே சொல்லலாம். 'நவமணித் திரட்டு நற்புகழ் திரட்டுக!'. என் நல்வாழ்த்துகள்!

சி. பாலசுப்பிரமணியன்.

குழந்தைகள் ஆண்டில்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய
சுவாமிகள் அவர்களின்
அருளாணைப்படி

### 1979 ஜனவரி முதல் டிசம்பர் வரை இந்து சமய மன்றம், குழந்தைகளுக்காக நடத்திய பல்வகைப் போட்டிகளின் விவரங்கள்

I மாதந்தோறும் நடத்தப்பெற்ற கட்டுரை, பேச்சு, இசை ஓவியப்போட்டிகளின் தலைப்புகள்:—

I பிரிவு. [L. K. G. — II வகுப்பு]

| கட்டுரை | பேச்சு | இசை | ஓவியம் |
|---|---|---|---|
| கண்ணன் | சம்பந்தர் | ஆத்திசூடி | பசு |
| சிபி | அப்பர் | கொன்றை- | ரிஷபம் |
| அரிச்சந்திரன் | சுந்தரர் | வேந்தன் | மயில் |
| கர்ணன் | மாணிக்க- | வெற்றி- | கருடன் |
| அருச்சுனன் | வாசகர் | வேற்கை | யானை |
| விதுரன் | ஆண்டாள் | மூதுரை | மூஞ்சுறு |
| தருமர் | அருணகிரி- | உலகநீதி | தாமரை |
| துரோணர் | நாதர் | நல்வழி | காமதேனு |
| ஏகலைவன் | காரைக்கா- | | கிளி |
| இராமன் | லம்மையார் | | காகம் |
| கும்பகர்ணன் | மார்க்கண் | | சிங்கம் |
| விபீஷணன் | டேயர் | | மான் |
| | மங்கையர்க் | | |
| | கரசி | | |
| | திலகவதியார் | | |
| | துருவன் | | |
| | மீராபாய் | | |

## II பிரிவு [III — V வகுப்பு]

| கட்டுரை | பேச்சு | இசை | ஓவியம் |
|---|---|---|---|
| சங்கரர் | திருவள்ளுவர் | பாரதியார் | விநாயகர் |
| இராமநுஜர் | கம்பர் | கவிமணி | முருகன் |
| மத்வர் | இளங்கோ | அழ. வள்ளி | காமாக்ஷி |
| இராம | ஔவையார் | யப்பா | லட்சுமி |
| கிருஷ்ணர் | கவிமணி | பெ. தூரன் | சரஸ்வதி |
| இராம | பாரதியார் | நாமக்கல் | சிவபெரு |
| லிங்கர் | தாகூர் | கவிஞர் | மான் |
| சேக்கிழார் | காளிதாசன் | ஆகியோரின் | திருமால் |
| ஆண்டாள் | சரோஜினி | பாடல்கள் | ஐயப்பன் |
| விவேகா | நாயுடு | | அனுமன் |
| நந்தர் | ஓட்டக்கூத்தர் | | இராமன் |

| கட்டுரை | பேச்சு | ஓவியம் |
|---|---|---|
| கபீர்தாசர் | புகழேந்தி | சிவலிங்கம் |
| இராம | எழுத்தச்சன் | மீனாட்சி |
| தாசர் | | |
| துளசிதாசர் | | |
| சைதன்யர் | | |

## III பிரிவு [VI — VIII வகுப்பு]

| கட்டுரை | பேச்சு | இசை | ஓவியம் |
|---|---|---|---|
| வியாசர் | சிவாஜி | விநாயகர்- | இராமாயண, |
| வால்மீகி | இராஜ- | அகவல் | மகாபாரத, |
| அகத்தியர் | ராஜன் | சிவபுராணம் | பாகவதக் |
| வசிட்டர் | அசோகன் | சதகங்கள் | காட்சிகள் |
| ததீசி | நரசிம்ம- | அபிராமி- | |
| விசுவா- | வர்மன் | அந்தாதி | |
| மித்திரர் | வீரபாண்டிய | திருநீற்றுப்பதிகம் | |
| யாக்ஞ- | கட்ட- | ஆசாரக்கோவை | |
| வல்கியர் | பொம்மன் | சகலகலாவல்லி | |



| | | |
|---|---|---|
| கிருபர் | கரிகாற்- | திருப்பாவை |
| கண்வர் | சோழன் | திருவெம்பாவை |
| கௌதமர் | மனுநீதிச்சோழன் | |
| ச்யவனர் | சடையப்பவள்ளல் | |
| ஜமதக்னி | சேரன்செங்குட்டுவன் | |
| | கோச்செங்கட்சோழன் | |
| | கிருஷ்ணதேவராயர் | |
| | வரகுணபாண்டியன் | |

## IV பிரிவு [படிக்காது கிராமத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைகள்]

### விளையாட்டுக் கலைத்திறன் போட்டிகள்:

ஏற்றப்பாட்டு
கும்மிப்பாட்டு
சிலம்பாட்டம்
கயிறு தாண்டுதல்
ஓலையால் பின்னுதல்
கோரையால் முடைதல்
களிமண்ணால் பொம்மைகள் செய்தல்
சோழி ஆட்டம்
விவசாயப் பாடல்கள்
இயற்கையழகுக் காட்சிகள்
விவசாயக் கருவிகள் வரைதல்
பரமபதம் ஆடுதல்.

குழந்தைகள் ஆண்டுப்போட்டிகளில்
பங்குகொண்ட மொத்தப் பள்ளிகள்: 225

வழங்கப்பட்டுள்ள மொத்தப் பரிசுகள்:
(நூல்கள்) 3260

(1) நிறைவு விழாப் போட்டிகளில் பங்கு
கொண்ட குழந்தைகள்:
(1) கட்டுரை-53
(2) ஓவியம்56+18=74 } = 145
(3) பேச்சு 18

(2) வழங்கப்பட்டுள்ள ரொக்கப்பரிசுகள் = ரூ. 400
(நூற்பரிசு நீங்கலாக)

அஞ்சல் வழி சமயம்
பங்கு கொண்டு பயன் பெற்ற குழந்தைகள் 600

இத்திட்டத்தால் மொத்தம் பயனடைந்தோர் 4005

இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மொத்தப்
பரிசு நூல்கள்: 3405

தொகுப்பு:- பு. மா. ஜயசெந்தில்நாதன்,
மாநிலச் செயலர்
இந்து சமய மன்றம், காஞ்சிபுரம்-631502.



# நிறைவு விழாப் போட்டிகளில் பரிசு பெற்ற குழந்தைகள்

முதற் பரிசு ரூ. **50**. இரண்டாம் பரிசு ரூ. **30**. மூன்றும் பரிசு ரூ **20**
(ரொக்கப் பரிசுகள்)

வெளியூர்: (மாநில அளவில்)

1. கட்டுரைப் போட்டி:

முதற்பரிசு: பா. மணிமொழி, VII
நகர மன்ற பெண்கள் பள்ளி, நாகப்பட்டினம்.

இரண்டாம் பரிசு: R. கோபாலகிருஷ்ணன், VI
அரசினர் உயர்பள்ளி, தென் திருப்பேரை.
(நெல்லை மாவட்டம்)

மூன்றும் பரிசு: P. ரீனு, VIII.
RBCCC'S நடு நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

2. ஓவியப் போட்டி:

முதற்பரிசு: N. விஜயகுமார், VIII
அரசு உயர்பள்ளி, கம்மாபுரம், (த. ஆ.)

இரண்டாம் பரிசு: பா. ஞானசேகரன், VI
ஆதர்ஸா மேல் நிலைப்பள்ளி, சென்னை-17.

மூன்றும் பரிசு: P. S. இராமமூர்த்தி, VIII
வைத்தீஸ்வரா ஓரியண்டல் உயர் பள்ளி,
மேட்டூர் அணை-2. (சேலம் மாவட்டம்)

## உள்ளூர்

1. பேச்சுப் போட்டி:

முதற்பரிசு: E. ஆறுமுகம், VIII
டாக்டர் P. S. சீனிவாசன் நகரமன்ற மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

இரண்டாம் பரிசு: V. சுப்பிரமணியன், VII
அந்திரசன் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

மூன்றும் பரிசு: V. சுப்பிரமணி, VI
ஸ்ரீ வாணி நிலையம் நடுநிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

2. ஓவியப் போட்டி:

முதற்பரிசு: R. வேங்கடேசன், VIII-A
பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

இரண்டாம் பரிசு: மு. கருணாநிதி, VII
சேர்மன் சாமிநாத முதலியார் உயர்பள்ளி, காஞ்சிபுரம்.

மூன்றும் பரிசு: L. சீனிவாசன், VII-A
ஸ்ரீ கிருஷ்ண நடுநிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.



## ஜகத்குருவின் அருளாணைப்படி 1979 ஜனவரி முதல் டிசம்பர் வரை நடத்தப்பெற்ற பல்வகைப் போட்டிகளில் பங்குகொண்டு பயன்பெற்ற பள்ளிகளின் சிறப்புப் பட்டியல்

1 அரசினர் மேல்நிலைப்பள்ளி, பனப்பாக்கம் வ. ஆ. மாவட்டம்.
2 ஆங்கிலப் பிரைமரி பாடசாலை, சி. ஐ. டி. காலனி, சென்னை-4.
3 ராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டியார் நடுநிலைப்பள்ளி, சென்னை-2.
4 பிரேமா நர்சரி வித்யாலயா ஆங்கிலப் பயிற்றுப் பள்ளி, நாங்குனேரி. (நெல்லை மாவட்டம்)
5 அரசுப்பள்ளி, நாகப்பட்டினம், (தஞ்சை மாவட்டம்)
6 சி. ஐ. டி. காலனி ஆங்கிலப் பள்ளி, சென்னை-4.
7 இந்து தொடக்கப் பள்ளி, குரங்கணி (நெல்லை மாவட்டம்)
8 நிதி உதவித் தொடக்கப்பள்ளி, கொர நாட்டுக் கருப்பூர், (தஞ்சை மாவட்டம்)
9 திருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, நாங்குனேரி, (நெல்லை மாவட்டம்)
10 திரு அவிநாசிலிங்கம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்
11 சங்கர ரெட்டியார் அரசினர் மேல்நிலைப்பள்ளி, நாங்குனேரி, (நெல்லை மாவட்டம்)
12 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, கருவிளச்சேரி, (தஞ்சை மாவட்டம்)
13 அரசினர் உயர்நிலைப்பள்ளி, கம்மாபுரம் (தெ.ஆ.)
14 அலெசோ மன்றம், திருமழபாடி (திருச்சி மாவட்டம்)
15 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கருப்பூர் (திருச்சி மாவட்டம்)

16 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காரப்பட்டு
(வ. ஆ)
17 அரசினர் உயர்நிலைப்பள்ளி, மாவடிப்பண்ணை
(நெல்லை மாவட்டம்)
18 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நாங்குனேரி
(நெல்லை மாவட்டம்)
19 அரசினர் நடுநிலைப்பள்ளி, செங்கோட்டை,
(நெல்லை மாவட்டம்)
20 பாரதி கல்வி நிலையம், உடையார்பாளையம்,
தம்மம்பட்டி அஞ்சல், (சேலம் மாவட்டம்)
21 சிந்தாமணி வித்யாலயா, ஆழ்வார் திருநகர்,
சென்னை-87
22 C. B. M. சகுந்தலா வித்யாலயா
கோயம்புத்தூர்-42
23 அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி
திருச்சிராப்பள்ளி-2
24 ஸ்ரீ கணேச வித்யாசாலா பிரைமரி பள்ளி,
தஞ்சாவூர்
25 ஜிப்சன் கிண்டர் கார்டன் ஆங்கிலப்
பயிற்றுமொழிப் பள்ளி, நாங்குனேரி
(நெல்லை மாவட்டம்)
26 விஸ்வ இந்து பரிஷத் பாடசாலை
(மாணவர் மன்றம்) சென்னை-59
27 முத்தையா உதவிபெறும் பள்ளி, பஞ்சகுளம்,
நடுச்சேத்தி (தஞ்சை மாவட்டம்)
28 இந்து மறவர் தொடக்கப்பள்ளி, அப்பன்கோயில்
(நெல்லை மாவட்டம்)
29 மொகைதீன் மஸ்தான் நடுநிலைப்பள்ளி,
செய்துங்க நல்லூர் (நெல்லை மாவட்டம்)
30 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி,
பழையனூர், (செங்கை மாவட்டம்)
31 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
இலுப்பக்கோரை, (தஞ்சை மாவட்டம்)
32 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாண்டூர்'
(செங்கை மாவட்டம்)
33 பாடலீஸ்வரர் நடுநிலைப்பள்ளி, கடலூர்



34 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி,
பூலாங்கிணறு (கோவை மாவட்டம்)
35 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மேலகரம்,
(நெல்லை மாவட்டம்)
36 அரசினர் உயர்நிலைப்பள்ளி, ந. சுப்பையாபுரம்
(கோவை மாவட்டம்)
37 விக்டோரியா பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
தூத்துகுடி
38 பார்வதி நடுநிலைப்பள்ளி, இலுப்பையூரணி,
39 பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் தொடக்க
பள்ளி, நாங்குனேரி
40 நகராட்சி நடுநிலைப்பள்ளி (விரிவு)
உடுமலைப்பேட்டை
41 ஆக்ஸ்போர்டு ஆங்கிலப் பள்ளி, திருநெல்வேலி
42 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி,
அந்தியூர், (கோவை மாவட்டம்)
43 மகாஜன உயர்நிலைப்பள்ளி, ஈரோடு
44 அரசினர் உயர்நிலைப்பள்ளி, அத்தாணி,
(பெரியார் மாவட்டம்)
45 அரசினர் உயர்நிலைப்பள்ளி, குருமந்தூர்
(நெல்லை மாவட்டம்)
46 அரசினர் மேல்நிலைப்பள்ளி, மல்லவாடி,
(தெ. ஆ. மாவட்டம்)

மற்றும், இந்துசமய மன்றத்தின் கிளைமன்றங்களால் போட்டிகள் நடத்தப்பெற்ற

47 ஒரத்த நாடு (தஞ்சை மாவட்டம்)
48 களக்காடு (நெல்லை மாவட்டம்)
49 தென்திருப்பேரை (நெல்லை மாவட்டம்)
50 குரங்கணி (நெல்லை மாவட்டம்)
51 வாழையடி (நெல்லை மாவட்டம்)
52 வாசுதேவநல்லூர் (நெல்லை மாவட்டம்)
53 முத்துகிருஷ்ணபுரம் (நெல்லை மாவட்டம்)
54 சேரன் மாதேவி (நெல்லை மாவட்டம்)

55 கோபிசெட்டிபாளையம் (கோவை)
56 கழனிப்பாக்கம் (வ. ஆ.)
57 வளசரவாக்கம் சென்னை-87
58 திருவல்லிக்கேணி சென்னை-5
59 கடலூர் (தெ. ஆ.)
60 பாளையங்கோட்டை
61 சிவகங்கை (முகவை)
ஆகிய ஊர்களிலுள்ள பல்வகைப்பள்ளிகள் முதலியன.

---

ஜகத்குருவின் அருளாணைப்படி நடத்தப்பெற்ற
பல்வகைப் போட்டிகளைப் பள்ளிகளில் நடத்துவதில்
பேரார்வங்காட்டிப் பணிபுரிந்த

## இந்துசமயமன்றக்கிளைகளின் பட்டியல்

1 இந்துசமய மன்றம், நாகப்பட்டினம்,
2 ஸ்ரீ காமாட்சி இந்துசமய மாதர் மன்றம், ஈரோடு.
3 ஸ்ரீ காமகோடி பக்தசமாஜம், விஷ்ணுபுரம், (தஞ்சை மாவட்டம்)
4 இந்துசமய மன்றம், தென் திருப்பேரை, (நெல்லை மாவட்டம்)
5 இந்துசமய மாதர் மன்றம், செங்கோட்டை.
6 இந்துசமய மன்றம், தம்மம்பட்டி
7 இந்துசமய மாணவர் மன்றம், கடலூர்
8 இந்துசமய மன்றம், கோபிசெட்டிபாளையம்
9 இந்துசமய மன்றம், களக்காடு (நெல்லை மாவட்டம்)



10 இந்துசமய மாணவர் மன்றம்: வாசுதேவ நல்லூர் (நெல்லை மாவட்டம்)
11 இந்துசமய மன்றம், திருவல்லிக்கேணி) சென்னை-5
12 இந்துசமய மன்றம், குரங்கணி (நெல்லை மாவட்டம்)
13 இந்துசமய மாணவர் மன்றம், மாவடிப்பண்ணை (நெல்லை மாவட்டம்)
14 தெய்வநெறிக் கழகம், உடுமலைப்பேட்டை
15 இந்துசமய மன்றம், வாழையடி, அகப்பைக்குளம் (நெல்லை மாவட்டம்)
16 இந்துசமய மன்றம், தூத்துகுடி
17 இந்துசமய மன்றம், தாம்பரம், சென்னை
18 இந்துசமய மன்றம், வளசரவாக்கம், சென்னை-87
19 இந்துசமய மன்றம், ஒரத்த நாடு (தஞ்சை மாவட்டம்)
20 இந்துசமய மன்றம், முத்துகிருஷ்ணபுரம் (நெல்லை மாவட்டம்)
21 இந்துசமய மாணவர் மன்றம் தென்திருப்பேரை (நெல்லை மாவட்டம்)
22 இந்துசமய மன்றம், செய்துங்கநல்லூர் (நெல்லை மாவட்டம்)
23 இந்துசமய மன்றம், சிவகங்கை (முகவை மாவட்டம்)
24 இந்துசமய குழந்தைகள் மன்றம், தஞ்சாவூர்
25 இந்துசமய மன்றம், பஞ்சநதிக்குளம் நடுச்சேத்தி (தஞ்சை மாவட்டம்)
26 இந்துசமய மன்றம், மொடையூர் (வ. ஆ.)

ஜகத்குருவின் அருளாணைப்படி நடத்தப்பெற்ற பேச்சு, ஓவியப் போட்டிகளில் பங்கு கொண்ட

## காஞ்சிபுரம் நகரப்பள்ளிகளின் பட்டியல்

1 பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி
2 அந்திரசன் மேல்நிலைப்பள்ளி
3 டாக்டர் P. S. சீனிவாசன் நகராட்சி மேல்நிலை பள்ளி
4 கா. மு. சுப்பராய முதலியார் உயர்நிலைப்பள்ளி
5 அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, பெரிய காஞ்சிபுரம்
6 தண்டபாணி ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி,
7 பச்சையப்பன் கிளை நடுநிலைப்பள்ளி
8 ஸ்ரீ வாணி நிலையம் நடுநிலைப்பள்ளி
9 தியாகி நடுநிலைப்பள்ளி
10 ஸ்ரீ கிருஷ்ணு நடுநிலைப்பள்ளி
11 புன்னமை தியாகராயர் வன்னிய சங்கம் நடுநிலை பள்ளி

ஜகத்குருவின் அருளாணைப்படி நடத்தப்பெற்ற மாநில அளவிலான பல்வகைப் போட்டிகளிலும் மாணவர்களை ஊக்குவித்துச் சிறப்பித்த திட்டத்தின் வெற்றிக்கு உறுதுணையானேர் பட்டியல்

## I ஆசிரியர்கள்

புலவர் திரு. D. கெங்காதரன், தமிழாசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி, பனப்பாக்கம் (வ. ஆ.

புலவர் திருமதி. சாரதாம்பாள் தமிழாசிரியர், RBCCC நடுநிலைப்பள்ளி, சென்னை-

திரு. V. ருக்மணி, C. I. T. காலனி, ஆங்கிலப்பள்ளி, சென்னை-4



புலவர் திரு. சு. மதியழகன், பாரதி கல்வி நிலையம், தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்)

திரு. சு. மங்களம் H. M. திருச்சிராப்பள்ளி

திரு. ஜெயராமன், அலேசோ மன்றம், திருமழபாடி

திரு. ஆறுமுக நயினுர், நாங்குனேரி

திருமதி. A. விருந்தாம்பாள், கருப்பூர்

திரு. R. ரேவதி, R. B. C. C. C. நடுநிலைப்பள்ளி, சென்னை-2

திரு. C. கண்ணன், காரப்பட்டு.

திரு. K. பாலகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை

திரு. S. முத்துகிருஷ்ணன், H. M. கம்மாபுரம்

திரு. க. தண்டபாணி, தமிழாசிரியர், அத்தாணி

திரு. S. சண்முகம், H. M. செங்கோட்டை

திரு. ந. ஆறுமுகம் தமிழாசிரியர், மல்லவாடி S. A.

## II இந்துசமய மன்றச் செயலர்கள்

திரு. S. சீனிவாசன், நாகப்பட்டினம்

திருமதி. R. கனகம், ஈரோடு

திரு. இராம. பட்டாபிராமன், விஷ்ணுபுரம் தஞ்சை மாவட்டம்

திருமதி. R. லலிதா, செங்கோட்டை

திரு கி. ஜெயராமன், வளசரவாக்கம், சென்னை-87

திரு. இரா. இராஜகோபாலன், முத்துக்கிருஷ்ணபுரம் நெல்லை மாவட்டம்

திரு. V. கணேசன், களக்காடு, நெல்லை மாவட்டம்

திரு. வெ. சங்கரநாராயணன், வாசுதேவநல்லூர், நெல்லை மாவட்டம்

திரு. அ. அமிர்தலிங்கம், மொடையூர், வடாற்காடு மாவட்டம்

திரு. S. V.பார்த்தசாரதி, திருவல்லிக்கேணி,
சென்னை-5

திரு. த. ச. முத்துமாலை நாடார், குரங்கணி,
நெல்லை மாவட்டம்

திரு. P. பச்சிமுத்து, மாவடிப்பண்ணை,
நெல்லை மாவட்டம்

திரு G சிவானந்தராஜன், உடுமலைப்பேட்டை

புலவர் திரு. கி. சங்கரன், தூத்துக்குடி

திரு. K. N. சிவசங்கரலிங்கம், கடலூர்

திரு. தில்லைப்பாண்டியன், வாழையடி, நாசரேத்,
நெல்லை மாவட்டம்

திரு. K. A. கிருஷ்ணய்யர், கோபிசெட்டிபாளையம்

திருமதி. T. V. தர்மாம்பாள், ஈரோடு

திரு. S. கோதண்டராமன், ஒரத்தநாடு

திரு. இரா. செல்லையா, செய்துங்கநல்லூர்,
நெல்லை மாவட்டம்

திரு. சிவ. திருஞானசம்பந்தம், சிவகங்கை

திரு. ஐ. முருகேசன், தென்திருப்பேரை,
நெல்லை மாவட்டம்

III மேற்குறித்தவர்களோடு எல்லாவகைப் போட்டிகளிலும் கலந்து கொண்ட எல்லாப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களும், பொறுப்பேற்றத் துணை ஆசிரியர்களும், மேற்குறித்த இந்துசமய மன்றச் செயலர்களோடு ஒத்துழைத்துப் பணிபுரிந்த ஏனைய மன்றப் பொறுப்புகளில் உள்ளவர்களும், மன்ற உறுப்பினர்களும், பிற தொண்டு நிறுவனங்களில் பணியாற்றுவோரும்:



பல்வகைப் போட்டிகளுக்கு நடுவர்களாகவும்,
மதிப்பீட்டாளர்களாகவும் பணியாற்றித்

## துணைபுரிந்தவர்களின் பட்டியல்

1. திரு. J. வீரபத்திரன் அவர்கள்,
வருவாய்த்துறை அலுவலர், நகராட்சி
அலுவலகம், காஞ்சிபுரம்.
2. திரு. S. சதாசிவம் அவர்கள், தமிழாசிரியர்,
காஞ்சிபுரம்
3. திரு. A. தேவராசன் அவர்கள், தமிழாசிரியர்,
காஞ்சிபுரம்.
4. திரு. S. இளங்கோவன் அவர்கள்,
தமிழாசிரியர், காஞ்சிபுரம்
5. திரு. சி. கயிலாயம் அவர்கள்,
ஓய்வு பெற்ற தமிழாசிரியர், காஞ்சிபுரம்
6. திரு. K. V. ஜனார்த்தனம் அவர்கள்,
ஓவிய ஆசிரியர், காஞ்சிபுரம்
7. திரு. C. இராசகோபால் அவர்கள்,
ஓவிய ஆசிரியர், காஞ்சிபுரம்

நிறைவு விழாப் போட்டிகள் நடைபெற்ற இடம்:

**(தலைமையாசிரியர் நல்லாதரவுடன்)**
**பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி,**
**காஞ்சிபுரம்-631501.**

குழந்தைகள் ஆண்டு பணித்திட்டத்தில்
மாநில அளவில் சிறப்புபெறும்,

1 இந்து சமய மன்றங்கள்:

I திருமதி. R. **கனகம்,**
தலைவி, ஸ்ரீ காமாட்சி இந்துசமய மாதர்
மன்றம், 173, ஆனந்தா ஸ்டோர்ஸ், ஈரோடு

II திருமதி. R. **லலிதா,**
தலைவி, இந்துசமய மாதர் மன்றம்,
33, ஆற்றங்கரைத் தெரு,
செங்கோட்டை.

III திரு. **த. ச. முத்துமாலை நாடார்,**
தலைவர், இந்துசமய மன்றம்,
குரங்கணி & Post நெல்லை மாவட்டம்.

2 ஆசிரியர்களும், பள்ளிகளும்:

I புலவர். திரு. **சு. மதியழகன்.**
பாரதி கல்வி நிலையம்,
தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்.

II திரு. **S. முத்துக்கிருஷ்ணன், B.A., B.Ed.,**
தலைமையாசிரியர்,
அரசுயர்பள்ளி, கம்மாபுரப், தெ. ஆ.

III புலவர். திரு. D. **கங்காதரன்,**
தமிழாசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி,
பனப்பாக்கம். வ. ஆ.



# கவிதைகள்

"கண்ணன் திருவடி எண்ணுக மனமே
திண்ணம் அழியா வண்ணம் தருமே

தருமே நிதியும் பெருமை புகழும்
கருமா மேனிப் பெருமான் இங்கே

இங்கே அமரர் சங்கம் தோன்றும்
மங்கும் தீமை பொங்கும் நலமே

நலமே நாடின் புலவீர் பாடீர்
நிலமா மகளின் தலைவன் புகழே."

மகாகவி சுப்பிரமணியபாரதியார்.



ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை யெழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்லபாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளுபாப்பா

பொய் சொல்லக்கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா

தமிழ்த் திருநாடு தன்னைபெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா

வேதம் உடையது இந்தநாடு—நல்ல
வீரர் பிறந்தது இந்த நாடு
சேதமில்லாத இந்துஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா

—மகாகவி, சுப்பிரமணியபாரதியார்.





சிரிக்கவேண்டும் சிரிக்கவேண்டும்
திரண்டு வாருங்கள்
வருத்தம் யாவும் துரத்தவேண்டும்
மலர்ந்து வாருங்கன்

படிப்பு வேண்டும் துடிப்பும் வேண்டும்
பறந்து வாருங்கள்
அடிப்புல்மேயும் அடக்கம் வேண்டும்
அமைய வாருங்கள்

ஒழுக்கம் வேண்டும் எழுச்சிவேண்டும்
உணர்ந்து வருங்கள்
உழைப்பில் என்றும் பிழைக்க வேண்டும்
உறுதி சேருங்கள்

அறிவுவேண்டும் அறமும்வேண்டும்
அரும்ப வாருங்கள்
உறவு வேண்டும் உரிமைவேண்டும்
ஒன்ருய் வாருங்கள்

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே

காலைமாலை உலாவி நிதம்
காற்று வாங்க வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே

தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்தபின் உணவும்
நோயை ஓட்டி விடுமப்பா
நூறுவயதும் தருமப்பா

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே
வருமுன் நோயைக் காப்பாயே
வையம் புகழ வாழ்வாயே

—கவிமணி, தேசிகவிநாயகம்பிள்ளை





பள்ளிக்கூடம் சென்றிடு
பாடங்களைப் படித்திடு
கல்வி தரும் குருஎல்லாம்
கடவுள் என்று கும்பிடு.

கற்று கற்று உயர்ந்திடு
கற்றதைப் போல் நடந்திடு
உயிரைவிடச் சிறந்தது
ஒழுக்கமென உணர்ந்திடு

தீயவரை வெறுத்திடு
தீமை செய்ய அஞ்சிடு
மெய்யுரைத்து வாழ்ந்திடு
மேதினியில் சிறந்திடு.

நன்றி:- ஆனந்த விகடன்,
தீபாவளி மலர்.



நாமே நமக்குத் துணை ஆஞல்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடி வரும்
சற்றும் இதற்கோர் ஐயமுண்டோ?

நெஞ்சிற் கருணை நிறைந்தவற்கு
நேயங் கொண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமை உடையவர்க்கு
வெல்லும் படைகள் வேறுளவோ?

உள்ளந் தேறிச் செய்வினையில்
ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர் மேடு ஆகாதோ?
பாறை பொடியாய்ப் போகாதோ?

கால நதியின் கதியதனில்
கடவுள் ஆணை காண்பீரேல்
ஞாலமீது சுகமெல்லாம்
நாளும் அடைந்து வாழ்வீரே!

-கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.



# 1

## பண்பாடு

வாகீச கலாநிதி
திரு. கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ., அவர்கள்,
சென்னை.

கடவுளை நம்பவேண்டும் குழந்தாய்—அவர்
கருணையிஞல் வாழுகிருேம் குழந்தாய்;
இடம் அகன்ற இவ்வுலகம் தன்னை—அவர்
இயற்றிநமை வாழவைத்தார் குழந்தாய்:

உடம்புதனை உயிர்வாழக் கொடுத்தார்—இதன்
உள்ளேபல் கருவிகளை அமைத்தார்;
திடம்பெறவே உணவுகளை அமைத்தார்;-அந்தத்
தெய்வத்தைக்கும்பிடுவாய் குழந்தாய்.

பாரதத்தாய் நாடிதனைப் போலே—இந்தப்
பாரில் எந்த நாடும் இல்லை குழந்தாய்;
சீருடைய மாமுனிவர் இருந்த—நல்ல
தேசமிதை எண்ணிமிக மகிழ்வாய்.

இனியதமிழ் மொழியினையே பேசும்—படி
ஈசன்நமை ஆக்கியுள்ளான் காணுய்;
கனிவுபெறும் நூல்கள்பல கொண்ட—தமிழ்
காசினியில் உயர்ந்தமொழி காணுய்.

கல்வியெனும் செல்வமது பெற்றால்—இந்த
காசினியில் யாவருமே உற்றார்;
செல்வம்சில நாளிருக்கும்; அழியும்—கல்வி
சேரச்சேர அழியாமல் நிற்கும்.

அன்பென்னும் நல்லகுணம் கொண்டால்—யாரும்
அடைந்துநமக் குறவினராய் ஆவர்;
துன்பம் வந்தால் போக்கித்துணை செய்வர்;—அன்பு
சொல்லினிலே செயலில் காட்ட வேணும்.

அன்னையொடு தந்தைநமைப் பெற்றே—கல்வி
யறிவுபெற வேவளர்த்து விட்டார்;
பின்னர்உப காரம்செய்வர் என்றே—எண்ணிப்
பேணவில்லை; அன்புமிகச் செய்தார்.

ஆதலினால் பெற்றவரைப் பேணி—அவர்க்
கன்புசெய்து மதிப்பளிக்க வேணும்;
ஈதுமுன்பு ராமபிரான் வாழ்வில்—கண்டே
ஏற்றமிந்தப் பண்பெனவே அறிவோம்.

மற்றவர்க்கு நன்மைசெய்ய வேணும்—அது
வாய்க்கவில்லை என்றிடினும் தீமை
உற்றவர்க்குச் செய்யக்கூடா திதுவே
உயர்வுடைய வாழ்வினிற்கோர் உறுதி.

சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேணும்;—பொய்யைச்
சாற்றினால் நம்நெஞ்சே உதைக்கும்;
சத்தியத்தை வாழ்வினிலே கண்ட—காந்தி
சாகவில்லை; நம்உளத்தில் வாழ்வார்.



பொறுமைமிக வேணும்நல்ல குழந்தாய் —அது
பூஷணமென் றேகருது குழந்தாய்;
வறுமையுள்ள பேர்களுக்கு நம்மால் —ஆன
வாழ்வளிக்க வேணும் இளங்குழந்தாய்;

மனிதருக்குள் வேற்றுமையே இல்லை —தெய்வம்
மாநிலத்தில் வாழ்வதற்கு விட்டார்;
இனிமைபெற யாரிடத்தும் நடந்தால் —புவியில்
எல்லாரும் உறவினர்கள் ஆவார்

கோபம்வந்தால் அடக்கிக்கொள்ளு குழந்தாய் -நல்ல
குளிர்ந்த தண்ணீர் கொஞ்சம்குடி குழந்தாய்;
பாபம் செய்ய எண்ணம்வந்தால் அடக்கி —நல்ல
பண்புகளை வளர்த்துக்கொள்வாய் குழந்தாய்

இன்னும்சில ஆண்டுகளைக் கடந்தால் —நீ
இளைஞனென்று ஆகிவிடுவாயே;
பின்னும்சில ஆண்டுகளும் சென்றால் —நீயே
பெரியமனி தன்வடிவம் கொள்வாய்

இப்பொழுதே நல்லபண்பை வளர்த்தால் —பின்னர்
எப்பொழுதும் நல்லவனாய் இருப்பாய்;
எப்பொழுதும் அன்பைமற வாதே —இந்த
இரும்புவியில் இன்பமுற வாழ்வாய்

2

# குழந்தைத் தெய்வம்

கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள்,
சென்னை.

வண்ணமலர்க் கூட்டமெலாம் வாய்திறந்து
சிரித்திடுமாம்
விண்ணிலுள மீன்களெலாம் விளையாட்டுக்
காட்டிடுமாம்
பண்ணிசைக்கும் பறவையெலாம் பலகதைகள்
பேசிடுமாம்
மண்ணுடனே கல்லும்தான் மனங்கசியப் பாடிடுமாம்!

சின்னஞ்சிறு பிள்ளைகளின் சிங்கார உலகமதில்
என்னென்ன அதிசயங்கள்; ஏதேதோ அற்புதங்கள்!
இன்பமெலாம் சபைகூடும் எழிலான உலகமது
என்றென்றும் பசுமையுடன் இதயத்தில் நிற்குமது.

கள்ளமிலா உள்ளத்தில் கடவுள் உண்டு
கறைபடியா நெஞ்சத்தில் இறைவன் உண்டு
துள்ளிவரும் பிள்ளைகளின் நலங் ஓங்கத்
திட்டமெலாம் தீட்டுகிறார் இந்த ஆண்டில்!

எவைஎவைகள் நல்லவையோ அவைக ளெல்லாம்
இளஞ்சிறுவர் பெறவழிநாம் காணல் வேண்டும்
அவமானம் அவமானம் நாட்டினுக்கே
ஆதரவிலாச் சிறுவர் பெருகினாலே!



கந்தனையும் கண்ணனையும் குழந்தையாகக்
கருதுகின்ற திருநாட்டில் பிறந்தோம் நாமும்
கண்ணெதிரே சாணுகின்ற குழந்தைத் தெய்வம்
கருகுவதை கண்டுமனம் சகிக்கலாமோ?

பால்குடிக்கும் பருவமுதல் பலநிலையில் பிள்ளைகட்கு
ஆனந்தம் அளிப்பதெது? அருந்துணையாய்
நிற்பதெது?
தொட்டிலிலே கால்நீட்டிச் சுகமாகத் தூங்கிடவும்
சப்பாணிக்கொட்டிடவும் சாய்ந்தாடிக காட்டிடவும்
வீதியிலே தோழருடன் விளையாடித் திரிந்திடவும்
அமுதமெனும் மழலைமொழி அழகாக ஒலித்திடவும்
துணையாக நிற்பதெது? சுகமளிக்கும் பாடலன்றோ?

நன்றி: 'ஊற்று' டிச. 1979.
பெங்களூர் தமிழ்ச் சங்கத் திங்களிதழ்



3

# இறைவன் ஆலயம்

திரு. மனசை ப. கீரன்
வானொலி நிலையம், சென்னை.

உலகம் இறைவன் ஆலயம்!
ஒவ்வோர் இடமும் இருக்கின்றான்!
மலரில், மலையில் வாழ்கின்றான்;
மாசில் இடத்தில் சேர்கின்றான்;

தூய மனத்தில் தங்குகிறான்;
சுத்தம் இருந்தால் அங்குள்ளான்;
தீய இடத்தை விடுகின்றான்;
சேர்தல் அசுத்தம், அகல்கின்றான்;

வீடு, சந்து, தெரு மூலை
விளங்கவேண்டும், பரிசுத்தம்!
வந்து கடவுள் தங்கிடுவான்,
வளமாய் நாடும் ஓங்குமே;



4

# கல்வி

நல்லிசைப் புலவர்
திரு. நடேச நாராயணன், B. Lit., அவர்கள்,
மானாம்பதி.

சொந்தம் இருந்தென்ன சொத்தும் இருந்தென்ன
தொழுதிடும் ஆட்கள் இருந்துமென்ன
சிந்தை நிறைந்திடும் கல்வி இல்லையானால்
சேரும் மகிழ்வுண்டோ சொல்வாயடி

சீரும் சிறப்பும் அடைந்துமென்ன —நல்ல
செல்வம் அனைத்தும் குவிந்துமென்ன
பேரும் எழுதத் தெரியாதென்றே சொன்னால்
பேசிச்சிரியாரோ சொல்வாயடி

பல்விதமான நகையணிந்தாலும்
பார்வைக் கழகாகத் தோன்றினாலும்
கல்வி அழகே அழகென்று நாமதைக்
கருத்தாகக் கற்று உயர்வோமடி

எழுதிப் படித்திடும் கல்வியடி —அது
ஏற்றம் அளித்திடும் செல்வமடி
தொழுதே அதைநாமும் கற்போமடி —இனி
சோர்வு ஒழிந்திட நிற்போமடி

5

# ஒழுக்கம்

நல்லிசைப் புலவர்
திரு. நடேச நாராயணன் B. Lit., அவர்கள்,
மானும்பதி.

ஊரார்கள் அனைவரும்
உவப்புடனே போற்றிடவே
ஒழுக்கமுடன் வாழ்ந்திடுவோம் உறுதியாய் —அதனால்
உயர்ந்த புகழ் பெற்றிடுவோம் இறுதியாய்

அன்னை தந்தை குருதெய்வம்
அனைவரையும் தொழுதிடுவோம்
அவர்களிடும் கட்டளையைப் பணிவுடன் —நாமே
அட்டியின்றி செய்திடுவோம் கனிவுடன்

காலத்தோடு பள்ளிக்கூடம்
கருத்துடனே சென்றிடுவோம்
கவனமாகப் பாடங்களைக் கற்போமே —என்றும்
கற்றபடி வாழ்க்கையிலே நிற்போமே

உள்ளம் உடல் தூய்மைபெற
உண்மை அன்பு மேலோங்க
கள்ளமிலா வாழ்க்கையினைப் போற்றுவோம் —நாமே
கண்ணியமாய் எச்செயலும் ஆற்றுவோம்



6

# அன்பு

பேராசிரியர் திரு. வே. சிவசுப்பிரமணியன் அவர்கள்,
மயிலம்.

நாடு செழித்திட வேண்டுமெனில் இந்த
ஞாலம் பிழைத்திட வேண்டுமெனில்
கூடி உயர்ந்திட வேண்டுமெனில் ஒரு
குற்றம் பிறர்க்குநீ செய்யாதே.

தீங்கு பிறர்க்குச் செய்திடினேஅது
ஈங்கு நமக்கு வரும் என்னும்
ஓங்கும் அறிவில் உறும்நன்மை—இந்த
உலகினில் வேறொன்றும் இல்லையப்பா.

பாலைப் பொழிந்து தரும்பசுதான் உயர்
பாரம் இழுத்திடும் மாடுகளும்
காலைக் கதிரவன் பொன்னொளியைவீசிச்
சாலி விளையவே செய்திடுவான்.

வாலைக் குழைத்திட்டுக் காவல் செயும்நாய்
வைகறை கோழி மணி அடிக்கும்
தோலைச் செருப்பெனத்தந்துதவும் உயிர்
தொல்லை உலகில் பலஅன்றோ

கம்பளி ஆடை குளிர்க்குதவும் ஆடு
காற்றில் அசுத்தத்தைப் போக்கும் மரம்
நம்பும் மணப்பொருள் தந்துதவும் பூனை
நாமென்ன செய்திடு வோம்இவைக்கு.

ஓரறிவு முதல் ஐயறிவு வரை
உற்ற உயிரினம் செய்துவரும்
நேரிய நன்மையை ஆறறிவான நீ
நிகழ்த்தா திருந்து வருந்தலாமோ?

ஒவ்வோர் உயிரும் உலகினில் நன்மையை
உற்ற இயல்பெனச் செய்திடலை
அவ்வவ் விடத்தினில் கண்டு வைத்தும் அறி
வின்றி மனிதர் இருக்கலாமோ?

கொடுக்க இருகரம் கொடுத்திருப்ப அது
கொல்லும் தொழில்செய்தல் யார்தவறு?
நடக்கக் கிடைத்திட்டகால்களி னால்பிற
நடுங்க உதைப்பதும் யார்தவறு?

நன்மை புரிவோர்க்கு நரகம் இல்லைஉயர்
நாகர் உலகின்பம் துய்த்திடலாம்
இன்மை எனவே ஆயிடினும் புகழ்
இங்கு பெறுதல் உறுதியன்றோ!

கருணை பொழிந்திட்ட புத்தரையும் உயர்
காந்தி மகானையும் பெற்று விட்டோம்
அருணை ரமணரும் வள்ளலாரும் இங்(கு)
அவதாரம் செய்ததை அறிந்திலமோ.



அன்பு தழைத்திட வையமெல் லாம்உயிர்
ஆற்றல் செழித்திட லாகுமன்றோ
துன்பு தொலைத்திட நீட்டுகரம் உயர்
தெய்வம் தனைவரக் காட்டுகரம்.

அறிவில் உறுபயன் பிறஉயிர்கள் உறும்
அல்லல் களைந்திட வேண்டுமன்புச்
செறிவில் உயிர்க்கே உதவுக என்றஅச்
சீர்த்த குறள்வழி யே நடப்பாய்.



## 7

# நல்வாழ்வு

திரு. பு. மா. ஜயசெந்தில்நாதன் அவர்கள்,
காஞ்சிபுரம்.

அன்பு வேண்டும் பண்பு வேண்டும்
ஆன்றோர் சொல்தனைப் போற்றிட வேண்டும்
இன்பம் வேண்டும் இனிமை வேண்டும்
ஈகைத் திறமும் இருந்திடவேண்டும்.
உயர்வுவேண்டும் உவகைவேண்டும்
ஊதா ரித்தனம் நீங்கவும் வேண்டும்
எளிமைவேண்டும் பணிவு வேண்டும்
ஏளனம் செய்யாதிருக்கவும் வேண்டும்
ஐயன் திருவடி வாழ்த்திடவேண்டும்
அவனருள் பெற்றே வாழ்ந்திடவேண்டும்.
ஒற்றுமைவேண்டும் ஒழுக்கம்வேண்டும்
ஓதும் தொழிலை வளர்த்திடவேண்டும்
ஔவைப் புலமை அமைதல்வேண்டும்
அவனியில் புகழ்பட வாழ்ந்திடல்வேண்டும்



## 8

# தெய்வம்

கவிஞர் பூவண்ணன் அவர்கள்,
சென்னை.

நீல மேனி ராமன்
நெடிய மேனி ராமன்
காலமெல்லாம் காக்கவல்ல
கடவுள் எங்கள் ராமன்

வில்லை ஏந்தும் ராமன்
வெற்றி வீரன் ராமன்
அல்லல் நீக்கி உலகை யாளும்
ஆண்ட வன்தான் ராமன்

தர்மம் காக்கும் ராமன்
தாயைப் போன்ற ராமன்
கர்மம் போக்கிக் கதி யளிக்கும்
கருணை வள்ளல் ராமன்

காடு சென்ற ராமன்
கம்பர் ஏத்தும் ராமன்
வீடுதோறும் குடியிருக்கும்
வேந்தர் வேந்தன் ராமன்

அனுமன் போற்றும் ராமன்
அணிலைப் போற்றும் ராமன்
மனிதர் தம்மைப் புனித ராக்கும்
மகிமை பெற்றோன் ராமன்

9

# நாடு

செஞ்சொல்மணி
திரு, பு. மா. ஜயசெந்தில்நாதன் அவர்கள்,
காஞ்சிபுரம்.

இந்திய நாடு நம் நாடு
இனிமை பொங்கும் தாய்நாடு
அன்பை பண்பை நீ நாடு
அவனியில் ஒற்றுமை தனைநாடு.

கங்கை காவிரி புகழ்பாடு
கம்பர் வள்ளுவர் கவிபாடு
கருணை பொறுமை வழிநாடு
கண்டு சிறப்பது உன் பாடு

இமயம் குமரி நம் நாடு
இந்தியர் ஒற்றுமை வழிபாடு
அண்ணல் காந்தி நெறிபாடு
அஹிம்சை அனைவரின் பண்பாடு.



10

# கருணை

கவிஞர் தண்டமிழ்ப்பித்தன்,
திரு. வே. ஸ்ரீநிவாசன் அவர்கள்,
விஜயவாடா.

கண்ணே இங்கே வா!
கருணைபற்றிச் சொல்லிடுவேன்
கண்ணப் பன்தான் ஒருவேடன்
கருத்து அறியா முழுமூடன்
எண்ணம் மட்டும் அவனுக்கே
இறைவன் இடத்தில் இருந்ததனுல்
அண்ணல் சிவனும் அவன் பக்தி
அனைவரும் அறியச் செய்தாரே!

ஒருநாள் சிவனுர் தன்கண்ணில்
ஒழுகிடச் செய்தார் இரத்தத்தை!
பெருமான் கண்ணில் ரத்தத்தை
பார்த்தான் சிறுவன் கண்ணப்பன்
பெரிதும் முயன்றுன் நிறுத்திடவே
பயனில்லாமல் போனதினுல்
அரிதாம் தன்இரு கண்களையே
இறைவன் கண்ணில் பொருத்திட்டான்!

பொருந்திய கண்கள் சிவன் கண்ணில்
    பொங்கியகுருதியை நிறுத்திடவே
பூரிப்பாகக் களித்திட்டான்!
    புரிந்தசெயலை நினைத்திட்டான்!
இறைவன் அவன்முன் தோன்றிட்டார்
    அருளேசெய்து வாழ்த்திட்டார்!
சிறுவன் வேடன் இறைவன் பால்
    செய்தகருணை சிறப்பன்றோ!

அன்றோர்நாளில் முற்காலம்
    ஆனைஒன்று திருமாலை
நன்றே வணங்கித் துதித்திடவே
    நாடித்தாமரைப் பூஎடுக்கச்
சென்றே தடாகம் இறங்கியது;
    சட்டெனமுதலை அதன்காலை
சங்கிலிகட்டி இழுத்தாற்போல்
    சேற்றுள்கவ்வி ஆழ்த்தியது.

ஆழ்ந்துவிட்ட காலினையே
    ஆனைபலமாய் இழுத்தாலும்
ஆவென பல்நிறை வாயாலே
    அந்த முதலை கடித்ததனால்
ஆனைபலமும் வீணாச்சு!
    ஓவெனக்கதறி அழலாச்சு!
ஆரும்வந்து காக்கவில்லை!
    ஆனை கடவுளைத் துதித்ததுவே!

தும்பிக்கையால் நாள்தோறும்
    தாமரைகொண்டு பூசித்த
நம்பிக்கைதான் வீணாமோ?
    நாரணன்தாமே விரைந்தோடித்



தடாகக்கரைக்கு வந்திட்டார்
    திகிரி என்னும் சக்கரத்தால்
செம்மைநிறமாம் முதலைதனை
    தீர்த்துக்கட்டி கருணைசெய்தார்!

கருணைநமக்கு இருந்திட்டால்
    கடவுள்கூட நம்மீது
அருளாம்கருணை செய்திடுவார்
    அளவில்லாமல் எந்நாளும்!
குருவும் அன்னை தந்தையரும்
    கடவுள்போன்ற கருணையுடை
பெரியோர் என்றே எண்ணிடுவாய்!
    பாரில்பக்தி செய்திடுவாய்!

பக்திஎன்று சொன்னாலே
    பகரும்அன்பு எனவாகும்!
சக்திபுத்தி எல்லாமே
    சிறந்தபக்தி இருந்திட்டால்
சேரும்உன்னைத் தவறாமல்!
    தரணிதன்னில் பெரியோனாய்ப்
பெரும்புகழும் பெற்றிடுவாய்
    படிப்பும்பணமும் உற்றிடுவாய்!

வாயால்நீயும் அழுதாலே
    வயிற்றுப்பசியும் வந்தாலே
நீயாய்க்கேட்கா விட்டாலும்
    நாடிஅப்பா அம்மாவே
ஆயாபொருளை உனக்களித்து
    ஆனந்தத்தைத் தருவதுதான்
சேயாம்உனக்கு அவர்காட்டும்
    செல்வக்கருணை அறிவாயே!

அறிவால்நீயும் உயர்ந்திடவே
ஆபத்தின்றி வாழ்ந்திடவே
நெறியோனுக விளங்கிடவே
நாளும்கருணை செய்பவர்கள்
அரிதாம்அன்னை தந்தையன்றி
அனைத்தும் காக்கும்ஒருசக்தி
இருக்கின்றதுதான் கருணைமொழி
இறைவன்என்றே தெரிந்திடுவாய்!

இறைவன்கருணை யாவர்க்கும்
ஏற்படவேண்டும் தப்பாமல்
மறவாமல்நாம் அவன்பெயரை
மனதில்வைத்து வணங்கிநிதம்
குறையேஇல்லா வாழ்வுதனை
கொடுப்பாய்என்று கேட்டிடவே
வருவாய்வருவாய் கண்ணேநீ
வரங்கள் வளங்கள் பெறுவாயே!





# 11

## குரு பக்தி

திரு. D. சங்கரநாராயணன், தென்காசி.

கடலுக்குக் கரை இல்லை
கல்விக்கு வயதில்லை
கருணைக்கு அளவில்லையே—குருநாதர்
வாக்கிற்கு விலை இல்லையே

பக்திக்கு வரம்பில்லை
பரம்பொருட்கு உவமை இல்லை
பூரணருக்கு அஞ்ஞானம் இல்லையே—குருநாதர்
வாக்கிற்கு விலையில்லையே

கங்கைக்குப் பாபம் இல்லை
கண்ணனுக்குத்தாபம் இல்லை
கந்தனுக்கு எதிரி இல்லையே-சத்குருவின்
வாக்கிற்கு விலை இல்லையே

வீரர்க்குப்பயம் இல்லை
யோகிக்குக் கலக்கம் இல்லை
இருளுக்கு ஒளி இல்லையே- தவசீலர்
வாக்கிற்கு விலை இல்லையே

12

## தத்தித் தவழ்ந்திடுவேன்

திரு. சக்தி. தேவராசன் அவர்கள்,
காஞ்சிபுரம்.

அவனியில் பிறந்ததுமே
    அழுதிட்டேன் யானே
சிவனே என்றிருந்தேன்
    சிந்தை யற்றிருந்தேன்
கவலை சேர்ந்ததம்மா
    கடவுளையும் நினைப்பதற்கே
அவனை நினைந்தே நான்
    ஆறுதல் அடைந்தேனே

கொஞ்சும் குழந்தைகள்
    ஒரு குட்டி உலகமம்மா
அஞ்சுதல் இல்லாமல்
    ஆடி விளையாடிடுவேன்
பிஞ்சு உள்ளங்களில்
    பிறந்திடும் மழலையாலே
நெஞ்சு களித்திடுமே
    நிம்மதியைப் பெற்றிடுமே!

தத்தித் தவழ்ந்திடுவேன்
    தாவி வளர்ந்திடுவேன்
முத்தம் அளித்திடுவார்
    முகத்தைப் பார்த்திடுவார்
சித்தம் நிறைந்திடவே
    சேட்டைகள் செய்திடுவேன்
அத்தனையும் என்றன்
    அறியாப் பருவத்திலே!



13

## அருள் தாராய்!

புலவர். திரு. சி. கயிலாயம் அவர்கள்;
காஞ்சிபுரம்.

நெஞ்சில் நிறைந்த இறைவா நீ
    நீண்ட வழித் துணை எமக்காவாய்
வஞ்சமில்லாத மனத்தாலே உனை
    வாழ்த்தி வழிபடு வோமேயாம்.

உன்னை வணங்கும் எங்களுக்கு
    உற்ற துணை எனநீவாராய்
நன்மை தந்திடும் எண்ணமதை
    நாளும் பெற்றிட அருள் தாராய்

அறிவை வளர்த்திடும் ஆற்றலையும்
    ஆன்ற பலனையும் நீ தருவாய்
குருவை வழிபடும் நல்லறிவும் கை
    குவித்துனைப் யோற்றும் அருள்தாராய்

நல்ல வழிகளைக்காட்டி யாம்
    நாளும் உயர்ந்திட நீ அருள்வாய்
வாழ்க்கைநெறியினில் வாழ நல்ல
    வளப்பம் பலவும் நீ தருவாய்

நல்லது பெற்றிட அருளியெமை
    நாட்டுக்குத் துணையாக்கிடுவாய்.
வல்லமை யெல்லாம் தந்திடுவாய்
    வாழ்த்தி வணங்கி மகிழ்ந்திடுவோம்.

## இவர்களே உனக்கு வழிகாட்டி!

| | | |
|---|---|---|
| **அ**றிவுக்கு | — | ஔவையார் |
| **ஆ**ண்மைக்கு | — | இராமன் |
| **இ**ரக்கத்திற்கு | — | இராமாநுஜர் |
| **ஈ**கைக்கு | — | கர்ணன் |
| **உ**ண்மைக்கு | — | அரிச்சந்திரன் |
| **ஊ**க்கத்திற்கு | — | துருவன் |
| **எ**ண்ணத்திற்கு | — | திருவள்ளுவர் |
| **ஏ**ற்றத்திற்கு | — | மார்க்கண்டேயர் |
| **ஐ**யம் இடுதற்கு | — | மணிமேகலை |
| **ஒ**ற்றுமைக்கு | — | பாண்டவர் |
| **ஓ**துவதற்கு | — | ஆஞ்சநேயர் |
| **ஔ**தாரியத்திற்கு | — | சடையப்பவள்ளல் |





## "இன்றைய ஞானிகள் இளமையில்"
(கவியரங்கக் கவிதைகள்)

2—3—80
குமரகோட்டம்

1

# குமரகுருபரர்

சைவ நன்மணி
புலவர் திரு. ச. சதாசிவம், M.A.,
காஞ்சிபுரம்.

ஞானமே உருவாய் வந்த
நாயகன், நல்வேல் கொண்டோன்,
தானவர் குலத்தை மாய்த்துத்
தண்ணருள் சுரந்து விண்ணில்
வானவர் அரசைக் காத்தோன்,
வணங்குவோர் இடும்பை தீர்ப்போன்,
கானவர் மங்கை தன்னைக்
கணபதி துணையால் கொண்ட

கந்தவேள் கருணை யாலே
களித்தனன் பெற்றோர்க் குச்சீர்
மைந்தனாய் வந்து நின்றேன்;
மகிழ்ச்சியே அவர்க்கு இல்லை

தந்ததம் பிள்ளை வாயைத்
திறந்திடா ஊமை என்றால்
முந்துநல் மகிழ்ச்சி அங்கே
மூழ்கியா திளைத்து நிற்கும்?

எந்தையும் யாயும் என்னை
இருகரத் தேந்திச் சென்று
தந்தவன் தனையே கேட்டார்
தவறுண்டா என்றூ ரூராய்!
கந்தவேள் கருணை வெள்ளம்
கரையற்றுப் பெருகி யோட
செந்திலம் பதியில், பேசும்
செயலெனக் குற்ற தம்மா!

பூமேவு செங்கமலப் புத்தே ளென்று
புகழ்மிக்க கலிவெண்பா புகன்றேன் அந்நாள்
பூமேவும் பிரமனுடன் புத்தேள் தங்கள்
புண்ணியமாய்க் கருதுகின்ற குமரன் தன்னால்
நாமேவு குருபரன்என் றழைக்கப் பெற்றேன்
நற்குமர குருபரனாய் ஞானம் பெற்றேன்
தேமேவு தமிழ்க்கவிதை பாடலுற்றேன்
திசையெங்கும் என்புகழும் பரவிற் றம்மா!

உறவுகொண்ட உலகத்தின் உண்மை கண்டு
உயர்ஞானம் இறைவனடி சேர்தல் என்றே
துறவுகொண்ட கோலத்தை மேற்கொண் டேன்யான்
தூசடையா வாழ்வதனை உயர்வாய் எண்ணி
உறவுகொண்டு ஓடுகின்றார் யார்யா ருக்கோ
உயர்இன்பம் அறிவுஎலாம் காசே என்று
நறவுண்ட குரங்கதுபோல் நாளும் வாழ்ந்து
நானிலத்தில் பெறும்இன்பம் நிலையா சொல்வீர்

மீனாட்சி செய்கின்ற பாண்டி யன்தன்
  மேன்மைநகர் மதுரையிலே கோயில் கொண்ட
மீனாட்சி தன்னையான் பிள்ளை யாக்கி
  மேதக்க கவிசொன்னேன், கேட்ட அன்னாள்
மீனாட்சி உருநீத்தாள், குழந்தையானாள்
  மேதினிமன் னன்கழுத்து மணியெடுத்து
மீனாட்சி என்கழுத்தி லணிந்து சென்றாள்
  தேனாட்சி இக்கவியின் திறமென் றெண்ணி.

வானோக்கி வாழுகின்ற பயிர்கட் கெல்லாம்
  வளமழைபோல் வருந்துமுயிர்க் கின்பம் சேர்க்க
தானோங்கும் குறம்பாடிக் கலம்ப கம்மற்
  றெத்தனையோ நூல்பாடி அறிவு சொன்னேன்
வானுகி நின்றருளும் ஈசன் கோயில்
  வளர்தில்லை ஆரூரே முதலாச் சென்று
ஊனாலும் உயிராலும் பயன்பெற் றுய்ய
  உயிர்நூல்கள் பலசொல்லி அறிவு சொன்னேன்

மாசில்லா மணியென்னும் ஆசான்
  மகிழ்ந்தென்னை வடதிசைக்கு அனுப்ப
காசிவிஸ்வ நாதனருள் பெற்று
  கவினாரும் கவிதைபல சொன்னேன்
காசியிலே உருதுமொழி தெரிய
  கலையரசி சரஸ்வதியை வேண்டி
தூசில்லாப் பாடல் பத்து சொன்னேன்
  தூயவள்அம் மொழியெனக்குத் தந்தாள்

பெரியவர் சிறுவ ரென்ற
  பேதம தின்றி யார்க்கும்
உரியவோர் முறையில் ஈசன்
  உயர்அருள் தனைநீர் வேண்டின்

அரியதே இல்லை நாளும்
அவனருள் கிடைக்கும் என்றேன்
நரியதைப் பரியாய்ச் செய்த
நாயகன் அன்றோ அன்னோன்.

அறம்தரும் பொருளைச் சேர்க்கும்
ஆழ்கல்வி அதனைக் கற்று
திறந்தெரிந் துலகில் வாழத்
தேர்ந்தவ ராக நீதி
அறமுடன் சொன்னேன் அஃதை
அறிவினால் ஆய்ந்து தேறி
உறவுடன் உலகில் வாழ்ந்து
உயர்இன்பம் அடைவீர் என்றும்



## 2

# இராமானுஜர்

புலவர் திரு. த. கு, பதுமநாபன் அவர்கள்,
திரு. வி. க. தமிழ் மன்றம், காஞ்சிபுரம்.

பொதியும் அவிழ்ந்து மணத்தை
வீசும் மலரைப் போல
பெரும்பு தூரில் இராமா
னுஜரும் வந்து உதித்தார்!

வேரும் மரமும் தழுவிக்
கிடக்கும் கொடிபோல் காஞ்சி
யாத வப்ர காசர்
குருவைத் தழுவிக் கற்றார்
குலையைத் தள்ளி நிற்கும்
வாழை மரத்தின் கிழே
குவியல் மண்ணே இன்றி
நிலைத்து நிற்க முடியா!
அந்தத் தன்மை போல
நெஞ்சில் எழும்பும் எண்ணம்
நந்தம் ராமா னுஜனார்
நன்றாய் அணைந்து கேட்பார்!

முயலைப் போல அடங்கி
இருக்க விரும்பா பாஷ்யர்
பயமே தெளிந்து குருவைக்
கேட்பார் வினாக்கள் பலவே'
எம்பார் என்னும் அன்பர்
இனிய வகுப்பு நண்பர்'
தம்பால் அன்பு கொண்டு
தங்கிப் படித்து வந்தார்'
துளிரைத் தாங்கும் மரமும்
மலரைப் பூத்து நிற்கும்
நிலையைப் போல்எம் பெருமான்
கலைகள் கற்றுத் திகழ்ந்தார்'
திறமை தன்னை மதிக்க
திருந்தா உள்ளம் கொண்ட
குருவாம் யாதப் ரகாசர்
கொல்லத் திட்டம் வகுத்தார்

கேள்வி கேட்டுத் துளைக்கும்
கிறுக்கு இராமா நுஜனை
ஆழ்த்தி அழித்து விடவே
அகத்தில் சூழ்ச்சி கொண்டார்

மதியும் முளைத்து வானில்
துளியைப் பரப்பும் நிலைபோல்
மனதில் கவ்வும் இருளும்
கடிதில் அகற்றிக் கற்றார்'
ஆசை வார்த்தை சொல்லி
அழிக்கத் திட்டம் போட்டு
காசி யாத்திரை செல்ல
அழைத்துச் சென்றார் குருஜி!
ஆ ரண்யம் தன்னில் எதிராஜ்
அழுவார் என்று எம்பார்
ஆ சிரியர் சூழ்ச்சி சொல்லி
அனுப்பி வைத்தார் காட்டில்'
சிறகு முளைத்த பட்சி
கூடு விட்டு வானில்
பறந்து செல்வ போல
உடைய(வ)ர் பறந்து சென்றார்'
இலையின் மேலே பனியாய்
இருக்கும் மக்கள் நிலையை
எழிலாய் விளங்கும் முல்லைத்
தேனாய் மாற்ற முயன்றார்'

காடு மேடு தேடி
சீடன் அழிந்தான் என்று
நீடு மகிழ்ச்சி கொண்டார்
நினைவில் நன்றி இல்லார்'



சுற்றி அலைந்த எதிராஜ்"
சோர்ந்த போது வரதர்"
பற்று கொண்டு வேடர்
வடிவில் வந்து காத்தார்'
வாஞ்சை கொண்ட வரதர்
இராமா நுஜரை அழைத்து
காஞ்சி நகரில் வந்து
கைங் கர்யம்செய்யச் சொன்னார்
ஆவி போன்ற வரதர்
அடிகள் போற்றி நாளும்
சேவித் தோதும் பாக்கியம்
பாவி பெற்றேன் என்றார்!
ஒளி இலாத கண்ணில்
தெளி விலாத நெஞ்சில்
எளிமைக் கோல வரதா!
எழுந்து அருள்க! என்றார்'

அடிமை உந்தன் நாமம்
அல்லும் பகலும் போற்றி
முடியில் துளபம் சாற்றும்
பெருமை தருக என்றார்!
தொல்லை தந்த குருஜீ
அல்லல் நீக்க வேண்டி
எல்லாம் அறிந்த இராமா
நுஜரின் சீடர் ஆனார்!
இராம காதை சொல்லும்
திருக்கோட் டியூரின் நம்பி
இருக்கும் திருமால் மலையில்
இருந்து உணர்ந்து கேட்டார்!

எம்பார் சுவாமி அவர்கள்
இருந்த மதத்தை விட்டு
தம்முள் ஒளிரும் சைவம்
கா ளஸ்திரிநகரில் சேர்ந்தார்.
அமணர் செய்யும் கொடுமை
ஆற்றி டாத எதிராஜ்
அவரை வாதில் வென்றார்
திருநா ராயணபுரம் தன்னில்!

அல்லா வுதீன் கில்ஜி
அமரில் கவர்ந்து சென்ற
எல்லா விக்ரப் பொருளும்
எளிதில் பெறவே சென்றார்!
டில்லி சென்ற எதிராஜ்
திவ்யக் கண்ணன் தன்னை
கில்ஜி செல்வி நாச்சி
கொஞ்சி மகிழக் கண்டார்!
ஓடி வாராய்ச் செல்லக்
கண்ணா என்று அழைக்க
ஓடி வந்து மடியில்
அமர்ந்தான் நந்த கோபன்!
கோட்டி நம்பி சொன்ன
மோட்சம் செல்லும் மந்த்ரம்
கேட்டு தன்னுள் வைக்க
நினைக்க வில்லை பெருமான்!
இந்த மந்த்ரம் சொல்லி
ஒருவன் சொர்க்கம் புகவே
சொந்த மாகும் என்றால்
தேவை இல்லை என்றார்



ஊரும் உலகும் கேட்டு
உயர்ந்த சொர்க்கம் பெற்று
தேரும் வழியே நலமாம்
என்ற கருணை கொண்டார்!
ஒருவன் நரகம் புகினும்
உலக மக்கள் கேட்டு
பெறட்டும் சொர்க்கம் என்று
கோ புரத்தின்உச்சி சென்றார்'
உயர்ந்த அரங்கன் கோயில்
உச்சி மீது நின்று
உரத்துக் கூவி அழைத்து
உரைத்தார் மந்த்ரம் அனைத்தும்'
கார்போல் கருணை மழையை
நீர் சூழ் நிலத்தின் மேலே
யார்தான் அருள்வார் இராமா
நுஜர்போல் இன்று சொல்வீர்!
தூய்மை இல்லா மனத்தில்
வாய்மை இல்லா சொல்லில்
தாய்மை போன்ற பெரியோய்
யானும் காணல் என்றே?

''கருணை கொண்டு மக்கள்
பெருமை எண்ணிச் சொன்ன
அருமை திவ்ய இராமா
நுஜரின் பாதம் போற்றி!

3

# இராமலிங்கர்

திரு. அ. சச்சிதானந்தம்,
(நால்வர் நற்றமிழ் மன்றம், காஞ்சிபுரம்-631501.)

அமுதாகக் கவிபொழியும் கவிகள் பல்லோர்
அகிலமிசைக் கண்டுள்ளோம் ஆனல் இந்தச்
சமுதாயம் ஏற்றமுற சாதி பேத
சகலவிதத் தாழ்மைகளும் நீங்கிப் போக
சமுதாயக் கீழ்மைகளைச் சாடிச் சாடி
சன்மார்க்க நெறிகாட்டிப் பசித்தோர்க்
[கெல்லாம்
அமுதிட்டுத் தொண்டுசெயும் புலவர் தம்மை
அடிகளாரைத் தவிரயாம் யாண்டும் காணேம்

பாடிடுவார் பலபுலவர் நாட்டிலுள்ள
பஞ்சத்தை வறுமைதனை விரட்ட எண்ணிச்
சாடிடுவார், ஆயிடினும் செயல் நடந்தார்
சரித்திரத்தில் யாருமிலை வள்ள லார்போல்!
வீடுதொறும் வாடுகின்ற மக்கள் தம்மை
விதியென்று பசியுடனே வருந்தி டாமல்
நாடிவந்து உண்ணுதற்கு வழியைச் செய்து
நல்லறிவு தந்திட்ட துறவி யாவார்



திருக்கோயில் வழிபாடு, பஜனைப் பாட்டு,
திருவமுது செய்வித்தல் சமயத் தொண்டு
ஒருகோடி மக்களுக்குப் பசியை நீக்கி
உடன்பிறந்தார் அனைவருமென் றெண்ணி
[அன்புப்
பெருக்கோடு செயுஞ்செயல்கள் சமூகத் தொண்டு
பேதமின்றி யிவையிரண்டும் ஒருங்கே கொண்டு
விருப்போடு செய்தவர்தாம், தவத்தின் மிக்க
வித்தகராம் இராமலிங்க அடிகள் ஆவார்

அரும்பசியை அகற்றினதால் வள்ளல் ஆனார்;
அருட் குணத்தால் அடிகளென அழைக்கப்
[பட்டார்;
இரும்பையுமே பொன்னுக்கும் சித்த ரானார்;
எள்ளளவும் ஆசையதில் கொள்ளாரானார்;
துரும்பையுமே அவர்மதித்தார்; துன்பம் செய்யார்;
தூய்மைக்கோர் வடிவமென விளங்கி நின்றார்;
மருந்தளித்துக் கொடுநோய்கள் மாற்றி நின்றார்;
மக்களிடை மகேசனையே கண்டு வாழ்ந்தார்!

சாப்பிட்டோம் போதுமினி என்பவர்க்குச்
"சன்மார்க்கப் போதினி"யாம் வகுப்பை
[வைத்தார்
கூப்பிட்டோம் வருகவென வையத்தாரைக்
கூவியொரு 'சன்மார்க்க சங்கம்' கண்டார்;
நேர்ப்பட்ட எவ்வுயிரும் தமதா யெண்ணி
நிலமிசையே ஒத்துரிமை உவப்பார் யார்?அப்
பேர்ப்பட்ட ஏழையரின் உளமே யீண்டெம்
பெருமானின் நடமாடும் இடமாய்த்
[தேர்ந்தார்!

சித்தமருத் துவநெறியே சிறந்த தென்றார்;
சித்தத்தைச் சிவன்பாலே வைத்து நின்றார்;
நித்தமருச் சித்தவனை நெஞ்சில் வைத்து
நிலவாத புலாலுடம்பை உடையால் மூடி
உத்தமராய் ஒருநூறாண்டுகட்கு முன்பே
உலகினிலே தெய்வமென உலவி வந்தார்;
'சுத்தமருந் திம்மருந்து தொழுவீர்' என்றே
சோதிவடி வாய்இறையைக் காட்டி நின்றார்!

நற்றொண்டு செய்திந்த நாநிலத்தை வாழ்வித்த
பற்றொன்றும் இல்லாவிப் பண்பினர்போல்
[—கற்றோர்சூழ்
தொண்டைவள நாடேநீ தொண்டையே
[நாடென்று
வண்டமிழால் சொன்னோம் வனைந்து.



## 4

# விவேகாநந்தர்

சொலல்வல்லநம்பி

புலவர். திரு. சீனி. மணிவண்ணன் அவர்கள்,
காஞ்சிபுரம்.

புகழ்பூத்த பாரதத்தின் பெருமைதனைப்
பாருக்கு எடுத்தோதிப் பழமைக்கும்
திகழ்புதுமைக் கும்நடுவாய் நின்றானை
தேங்குபுகழ் முனிமரபின் வந்தானை
திகழொளியை ஞானத்தை வழங்கினானை
சிறப்புடைய சிகாகோவில் தன்மதத்தை
மகிழ்ந்தினிது நிலைநாட்டி வந்தவனை
விவேகாநந் தனையானும் பாடுதுங்காண்

கண்மணியாம் மகன்வேண்டி நோற்கும் நாளில்
காசிவிஸ்வ நாதன்கட் டோன்றிய ஒளிதான்
பணிமொழிபு வனேஸ்வரி திருவயிறு உறவும்
பரமஅம்சர் தன்னிடத்தே தோன்றிய ஒளிதான்
ஒன்றுகல்கத் தாநகரு றவும்'என் மனிதன்
தோன்றிவிட்டான் என்றேமா முனிகளி கூர
நன்மார்க்கம் நனிவிளங்க நல்வழிப் பொருளாய்
நரேந்திரநா தன் வுலகில் தோன்றி னான்

ஞானமும் துடுக்குங் கொண்ட பிள்ளை
நரேந்திரன் முறையோடு கல்வி கற்றுக்
கானமும் இசைக்க வல்லான் ஆனுன்
கடவுளைக் காணும் வேட்கை கொண்டான்
காணும் முனிவர் வரைக் கேட்கும்
கண்டவர்க் காணுன் சோர்ந்தான் அந்தோ!
காணவே எதிர்பார்த் திருந்த பரம
அம்சரை நாடியே சென்று சேர்ந்தான்.

'எத்தனைநாள் உனக்காகக் காத்தி ருப்பது'
என்றேமா முனிகேட்க, 'கண்ட துண்டா
அத்தனைநீ என்றுனே நரேந்தி ரன்தான்
ஆம்பிள்ளை என்றுகூறி, உன்னில் அவனை
அத்தனைத் தெளிவாய்நான் கண்டேன் என்ருர்
ஆம்உனக்கும் காட்டுவேன்; உண்மை என்ருர்,
இத்தனையும் கேட்டங்கு வியப்பு மிகவே
அப்படியே சிலையெனவே நின்ருன் மைந்தன்

மாமுனியும் சீடனுக்குக் காட்டுவன எல்லாம்
மோனமாய் ஞானமாய் இருந்து; காட்ட
மாபெரும்உண் மையெல்லாம் எடுத்தோத ஞான
விளக்கெனவே நனிவிளங்கி சிகாகோசர் வமத
மாநாட்டில் தன்பதத்தை நாட்டிகர ஒலியும்
வையகத்தில் புகழொளியும் நனிபெற்று வந்தான்
மாமன்னன் சேதுபதி தேரிலமர்த்தி, தானே
வடம்பிடித்து இழுத்துவந்து பெருமை
(சேர்த்தான்

—



5

# ஆதிசங்கரர்

கவிஞர்
திரு. சக்தி தேவராசன் அவர்கள்,
சக்தி & கோ., காஞ்சிபுரம்.

ஆதி சங்கரனுர் அவதரித்த காரணத்தை
தாழ்மையுடன் உங்களுக்குத் தந்திடுவேன்
கவிதையிலே
மேதினியில் மாந்தர்கள் மெய்ஞ்ஞானம் தனையேற்று
அஞ்ஞானம் விலகுதற்கு அவதரித்தார் அவனியிலே.
நான்முகனும் நாரணனும் நம்சிவனைத் தான்வேண்டி
"நானிலத்தில் மெய்ஞ்ஞானம் நாளும் செழிப்பதற்கே
தாள்பணிந்தோம் சங்கரனே தயவு நீ
செய்திடுவாய்" —என
"பாரத தேசத்திலே பார்புகழும் கேரளத்தில்
ஆரியர் குலத்தினிலே ஆர்யாம்பாள் சிவகுருவின்
மகனுய்ப் பிறந்தநும் மனக்குறையைத்
தீர்ப்போமென"

அச்சொல் கேட்டு அகன்றனர் அனைவரும்
கொடுத்த வாக்கைக் கருத்தினிற் கொண்டு
சிவனை நினைந்த சிந்தனை யாளரின்
கனவிலே தோன்றினுன், கருவுற்ருள் ஆர்யாம்பாள்
அவனி செழிப்பதற்கே அவதரித்தார் காலடியில்
அதிசயங்கள் தோன்றின அவனியிலே ஆங்காங்கு.

அறிவிற் சிறந்த அழகுக் குழந்தை
கலைகள் யாவும் கற்றுச் சிறந்தார்.
காலன் கொடுமையால் தந்தையை இழந்தார்
அன்னை அவளும் அன்புடன் மகனை
இன்முகத் துடனே இனிது வளர்த்தாள்
உரிய வயதில் உபநயனம் ஏற்று
குருவை நாடிக் கொள்வன கொண்டு
திருவாம் தாயைத் தினமும் தொழுது
ஏழை இல்லம் நாடிச் சென்று
நெல்லிக்கனிக்கு நிகராய்த் தானும்
கனகதாரையைப் பொழியச் செய்தார்.
அன்னை படுத்தாள் தொல்லை நோயால்
அதுகண்டு வருந்தி அழைத்தார் ஆற்றை
நதியும் வந்து அருகில் ஓட
அன்னை அவளும் அதிசயமுற்று
நன்னீராடி நம்பியை வாழ்த்தினள்.
தொல்லை வினையால் தொடர் வினைப்பயனால்
செல்வன் சங்கரன் சென்றான் ஆற்றிடை.
மூழ்கிக் குளிக்க முயன்ற வேளையில்
வாழ்வை உயர்த்த வந்தது முதலை.
காலைப் பற்றிக் கவ்வி இழுக்க
அம்மா என்றே அலறி அழுதார்.
ஓடி வந்தாள் ஈன்ற அன்னை
அம்மா! நானும் நல்லது சொல்வேன்
கேடு இல்லை கேட்டிடு தாயே!
என்னை இழந்தால் என்னுயிர் பிழைக்கும்
என்று சங்கரன் எடுத்துச் சொன்னார்.
அன்னை அவளும் அழுகை நிறுத்தி
அபயம் அளித்தாள் அகன்றது முதலை.
அரனை நினைத்து அருளது பெற்று



துறவி ஆனார் துயரது விட்டு.
குருவை நாடிக் காவியுடுத்தி
நருமதை ஆற்றை நாடிச் சென்று
குரு கோவிந்தரைக் கண்டு தொழுது
உபதே சத்தை உவந்து பெற்றார்.
அத்வைத தத்தை அவனியில் பரப்பிச்
சோதனை பலவும் தீதற முடித்து
காலடியாலே காண்பன கண்டு
அன்னைக் கடனை அன்புடன் முடித்து
சிவானந்த லகரி சிறப்புடன் பாடி
அவாவைத் தவிர்த்து அரனை நினைந்து
அழகு மடங்கள் அவனியில் நிறுத்தி
காஞ்சியில் காம கோடியை வழுத்தி
காமகோடி பீடம் கவினுற அமைத்துக்
காசினி சிறக்கக் கவினார் தொண்டு
கருணையாற் செய்து காமாக்ஷி பதத்தில்
கலந்து ஒன்றினார் கவினார் சங்கரர்,
ஞானச் சுடராம் சங்கரர் பாதம்
ஞானம் பெறவே நாளும் வழுத்துவாம்.
சங்கரர் பாதம் சந்ததம் போற்றிச்
சங்கடம் தவிர்ப்போம். சற்குரு வாழி!



உ

# "என்னருங் குழந்தாய் இனிதிதைக் கேளாய்"

திரு. மு, சண்முகம், M.A., B.T., அவர்கள்
தலைமையாசிரியர், பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி,
காஞ்சிபுரம்.

அன்பின் முதலே! அருளின் முடிவே!
என்னருங் குழந்தாய்! இனிதிதைக் கேளாய்!
ஒளியாய் வெளியாய் உலகிலுள் பொருளாய்
உருவமும் அருவமும் உண்மையும் பொய்யுமாய்
உலகினர் கண்டிடும் உன்னதத் தெய்வம்
உனக்கும் ஒத்ததே உண்மையீ தறிவாய்;
பற்பலக் கடவுளர் பாரினில் ஏனெனப்
பகர்ந்திடும் நல்லவர்க் கிப்பதி லுரைப்பாய்;
ஊளைச் சதையும் உறையும் ரத்தமும்
பானை வயிறும் பார்வைக் குறைவும்
ஒருடல் பெற்று உழன்றிடுங் காலை
அழியும் உடலுக் காயிர மாயிரம்
அளித்துக் காத்திடத் தயங்குவ துண்டோ?
ஊளைச் சதையைக் குறைத்திட ஒருவர்
ஓடும் ரத்தம் சீர்பட ஒருவர்
பானை வயிறும் பதுங்கிட ஒருவர்
பார்வை சீர்படப் பண்ணுவார் ஒருவரென்



றெண்ணிறந் தோரை இனிதே யமர்த்தி
இனிய சுகந்தனைக் கண்டிடல் போலே
உடலில் உயிராய் விளங்கிடும் ஆன்மா
ஒவ்வொரு நிலையிலும் உருப்பட வேண்டி
உலகோர் பெற்றதே ஒளிசூழ் கடவுளர்;
காத்தருள் புரிபவர் கணபதிப் பெருமான்
கலைகளை அளிப்பவள் கலைவாணி அன்னை
தோத்திரம் செய்திடத் துணைவரும் முருகன்
பாத்திரம் அறிந்துப் பகிர்ந்திடப் பரமன்
வற்ரு நிதியை வழங்கிடத் திருமகள்
வறியவர்க் குரியவர் வைகுண்ட வாசன்
இன்னுமெத் தனையோ கடவுளர் உண்டு
ஏனென் றுனையினி எவரும் கேளார்
அத்துணைச் சக்தியும் ஆதி சக்தியென்
றறிந்திடு(ம்) மட்டில் அனைத்தையும் போற்றுக.



# கனிவார்ந்த கைகூப்பு

※

* மன்றம் நடத்திய மாதாந்திரப் போட்டிகள்
நிறைவு விழாப் போட்டிகள்
'அஞ்சல் வழி சமயம்' —இவற்றில் பங்குகொண்டு
பயன் பெற்ற குழந்தைகளுக்கும்;

* குழந்தைகளை இத்திட்டத்தில் ஊக்குவித்த
தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள்,
ஆகியோருக்கும்;

* குழந்தைகளின் இப்பணியில் ஈடுபாடு
கொண்டு ஆர்வங்காட்டித் தொண்டாற்றி
எங்கட்குப் பெருந்துணையாக விளங்கிய
தமிழாசிரியர்கள், ஆசிரியர்கள்,
இந்துசமய மன்றங்களின் உறுப்பினர்கள்
ஆகியோருக்கும்;

* 'அஞ்சல் வழி சமயம்' —பாடங்களை எழுதி உதவிய
எழுத்தாளர் பெருமக்கட்கும்;

* மலருக்கு வாழ்த்துரை வழங்கிய சான்றோர்க்கும்;
கவிதைகள் வழங்கிய கவிஞர்க்கும்;

* கட்டுரைகளையும் ஓவியங்களையும்
மதிப்பிட்டுத்தந்த ஆசிரியர்களுக்கும்;

* இத்திட்டத்தில் என்னுடன் ஈடுபட்டு
அயராது தொண்டாற்றி இதன் சிறப்புக்கும்
வெற்றிக்கும் பெரிதும் உறுதுணையாகிய
புலவர். திரு. சி. கயிலாயம் அவர்க்கும்;



பிற உதவியாளர்க்கும்;

இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த
துரை அச்சகத்தாருக்கும்,

இந்துசமய மன்றச் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

---

* இந்நற்பணித் திட்டத்தைத்தந்து எளியேனை
ஈடுபடுத்திப் பணிகளைச் செய்வதற்குரிய
வலிவும், பணியில் பொலிவும், அருளி;
இதன் வெற்றிக்கு மூலகாரணமாக
அருளாசியும், அருளாதரவும் தந்து
வழி காட்டியும், வாழ்த்தியும், ஆட்கொண்டு
வழி நடத்தியும், வருகின்ற நடமாடுந்தெய்வம்
குருநாதர்

**ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அவர்களின்
திருப்பாத கமலங்களைத்
திசை நோக்கிப் பணிந்து போற்றுகின்றேன்.**

**பு மா. ஜயசெந்தில்நாதன்,**
**மாநிலச் செயலர்,**
**இந்து சமய மன்றம்.**



# குழந்தைகள் ஆண்டு நிறைவு விழா

## நிகழ் முறை

★

**2–3–80 ஞாயிறு**

குமரகோட்டம் - மாலை 6-00 மணி

விழாத் தலைமையும்,
மலர் வெளியீடும்:

திரு. P. கலியபெருமாள், B. E., அவர்கள்
முதல்வர், பக்தவத்சலம் தொழில் நுட்பக்கல்லூரி, காஞ்சிபுரம்.

வாழ்த்துரை வழங்கியோர்;

திரு. மு. சண்முகம், எம்.ஏ., பி. டி , அவர்கள்
தலைமையாசிரியர், பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்

திரு. வெ. சம்பந்தம் அவர்கள்
துரை அச்சகம், காஞ்சிபுரம்.

திரு. C. வரதராசன் அவர்கள்
அரிமா சங்கம், காஞ்சிபுரம்.

திரு. அ. நடேச நாராயணன் அவர்கள்
தமிழாசிரியர், மாணம்பதி.

பரிசுகள் வழங்கியவர்:

திரு. T. காசிநாதன் அவர்கள்,
செயல் அலுவலர். குமரகோட்டம்.



கவியரங்கம்:

புலவர். திரு. சீனி. மணிவண்ணன் அவர்கள்

புலவர். திரு. ச. சதாசிவம், M.A., அவர்கள்

புலவர். திரு. த. கு. பதுமநாபன் அவர்கள்
திரு. வி. க. தமிழ்மன்றம், காஞ்சி.

கவிஞர். திரு. சக்தி. தேவராசன் அவர்கள்
சக்தி & கோ, காஞ்சிபுரம்

திரு. அ. சச்சிதானந்தம் அவர்கள்
நால்வர் நற்றமிழ் மன்றம், காஞ்சிபுரம்

நன்றி நவிலல்:

புலவர், திரு. பு. மா. ஜயசெந்தில்நாதன், M.A ,
மாநிலச் செயலர், இந்துசமய மன்றம், காஞ்சிபுரம்.



# இந்து சமய மன்றம்.

## நோக்கங்கள்:

- ஃ பக்தி, வழிபாடு இவற்றை மக்களிடையே வளர்த்தல்.
- ஃ இந்துமதக் கோட்பாடுகளை மக்களிடையே பரப்புதல்.
- ஃ இளைஞர்களையும், குழந்தைகளையும் ஓய்வு நேரங்களில் இறைவன் திருப்பெயர்களை எழுதுமாறு ஊக்குவித்தல்.
- ஃ மக்கட்குச் சமயத்துறை தொடர்பாக இயன்ற ஆதரவு புரிதல்.
- ஃ உழவாரத் தொண்டுபோன்ற சமயத் தொண்டுகளைச் செய்தல்.
- ஃ ஏழை மாணவருக்கு இலவசமாகக் கல்வியறிவு புகட்டுதல்.
- ஃ ஆலயப்பணிகளில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டு செய்தல்.
- ஃ மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகட்குக் குருவருட் பிரசாதம் வழங்குதல்.
- ஃ பிடியரிசித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
- ஃ அவ்வப்போது இலவச வெளியீடுகள் அச்சிட்டு வழங்குதல், இன்ன பிறவும்.

இப்பணிகளில் அயராதுழைத்துவரும் இம்மன்றக் கிளைகள் தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் உள்ளன.

கடவுளைக் கும்பிடு- கஷ்டங்கள் நீங்கும்
விபூதி அணிந்துகொள்- வியாதிகள் அகலும்
இந்துதர்மத்தைக் கடைப்பிடி-இன்பமாக வாழ்க.





எங்கள் அண்ணல் காந்தியே
ற்றம் மிக்க காந்தியே
உலகம் ஒன்றாய் வாழவே
உயர்ந்த வழியைக் காட்டினார்
அஹிம்சை அன்பு சத்தியம்
அமைந்த வாழ்வு வாழ்ந்திட்டார்
கருணையாளன் காந்தியைக்
கருத்தில் வைத்துப் போற்றுவோம்.

பு. மா. ஜயசெந்தில்நாதன்.

ஃ பக்தி, வ
வளர்த்

ஃ இந்து
பரப்

ஃ இளை
நே
எ

ஃ



நான்பிறந்த நாளினையே
குழந்தை நாளாய்
நாடெங்கும் கொண்டாட
வேண்டு மென்றே
மேன்மைமிகு **ஜவஹர்லால்**
விருப்பங் கொண்டார்
விளைந்தனவே நலம்பலவும்
குழந்தை கட்கே.
ஆண்டினிலே ஒருநாளைக்
குழந்தை நாளாய்
ஆர்வமுடன் கொண்டாடி
வந்தோம் ஆனல்
ஆண்டிதனை முழுவதுமே
குழந்தை ஆண்டாய்
அகிலமெலாம் கொண்டாடக்
கண்டோம்! கண்டோம்!!

நன்றி: "ஊற்று"
(பெங்களூர் தமிழ்ச் சங்க இதழ்

[illegible] அச்சகம், காஞ்சிபுரம். (போன்: 2681)